*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **18 மே 2023**

## <u>பத்திரிகை செய்தி</u>

மாண்புமிகு தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தெலங்கானா மாநிலத்தில் ரயிலில் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

முன்னதாக, ரயில் மூலமாக செகந்திராபாத் ரயில் நிலையத்திலிருந்து பத்ராச்சலம் சென்று ஸ்ரீ சீதா ராமச்சந்திர சுவாமி கோயிலில் வழிபாடு செய்தார். அதனைத் தொடர்ந்து வீரபத்திர விழா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடினார். அவர்களின் பிரச்சனைகளை நேரடியாக தெரிந்து கொண்டார். மாநில அரசின் கவனத்திற்கு அவற்றை எடுத்துச் சென்று தீர்வு காணுவதாக உறுதி அளித்தார்.

ஆந்திர மாநிலத்துடன் மீண்டும் இணைக்கப்பட்ட கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கிராம பஞ்சாயத்துகளை மீண்டும் தெலுங்கவுடன் இணைப்பதற்காக மத்திய அரசுடன் பேசுவதாக தெரிவித்தார்.

அதன் பிறகு செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். மேலும், ஸ்ரீ சைதன்யா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற ஒய்-20 நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். அங்கு, “21 ஆம் நூற்றாண்டிற்கான திறன் மேம்பாடு” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு ரயில் மூலமாக மீண்டும் செகத்திராபாத் ரயில் நிலையம் வந்தடைந்தார்.